பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 07 | செவ்வாய்க்கிழமை | 22.08.2023 | அதிர்வு 21

## கொழும்பில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பில் நேற்று ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 03

# விடுதலைப் புலிகள் காலத்தில் பௌத்தத்துக்குப் பாதுகாப்பு!

## வடக்கு, கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் பெருமிதம்



– கி.வசந்தரூபன்–

விடுதலைப் புலிகள் காலத்தில் பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை. மாறாக பாதுகாப்பே இருந்தது. அதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் நாங்கள் அணிந்திருந்த எங்கள் காவி உடைக்கு தந்த மரியாதை என வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசார நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமத மக்கள் ஒன்றியம் 04



# வாய்ச் சவடால் விட வேண்டாம்

## துணிவு இருந்தால் தேர்தலுக்கு வாருங்கள் ரணிலுக்கும், பஸிலுக்கும் சஜித் சவால்


கொழும்பு, ஓகஸ்ட் 22

“வாய்ச்சவடால் விட வேண்டாம் துணிவு இருந்தால் தேர்தல் ஒன்றை உடனடியாக நடத்திக் காட்டுங்கள்.” 04

### அடுத்த வருடம் தேர்தல் ஆண்டு

## வீரவசனம் பேசுவோர் இறுதியில் கவிழ்வர்!

### ஜனாதிபதி ரணில் சாட்டையடி



“அடுத்த வருடம் தேர்தல் வருடமாகவே இருக்கும் என நான் நினைக்கின்றேன். இப்போது எம்மை விமர்சித்து வீரவசனம் பேசுவோர் தேர்தல் காலங்களில் தோல்வியடைந்தே போவார்கள்.”

– இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் “தேர்தலை நடத்த அரசு 04

### எந்தத் தேர்தல் நடந்தாலும்

## தமிழ் மக்களின் ஆணை மொட்டுவுக்கு கிடைக்கும்

### நம்புகின்றாராம் பஸில்



நாட்டில் எந்தத் தேர்தல் நடந்தாலும் தமிழ் மக்களின் ஆணை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குக் கிடைக்கும் 04

# ரணில் - மஹிந்த இரகசிய சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அண்மையில் இரகசியமாகச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

கொழும்பு – சங்கிரில்லா ஹோட்டலில் அந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மஹிந்தவின் இளைய 04

## இரகசியம்



வழமையாகத் தேர்தலைக் கண்டாலே அஞ்சும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ‘அடுத்த வருடம் தேர்தல் ஆண்டு’ என்று இப்போது சொல்லிவிட்டார்.

எல்லாக்கட்சிகளுமேஅதற்காக குத்தி முறியத் தொடங்கி விட்டமை கண்கூடு. 03

# நல்லூரில் முருகன் வீதியுலா









நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவ முதலாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. முருகப்பெருமான் வெள்ளி மயில் வாகனத்திலும் வள்ளி, தெய்வானை வெள்ளி அன்னவாகனத்திலும் வீதியுலாவந்தனர்.

(படங்கள் – பிரபாகன் டிலக்சன்)

# பெற்ற தாயைக் கழுத்தறுத்து கொலை செய்த மூத்த மகன்!

## தென்னிலங்கையில் பயங்கரம்

குடும்பத் தகராறு காரணமாக மூன்று பிள்ளைகளின் தாய் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கம்பஹா – திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. அந்தப் பெண்ணை அவரின் மூத்த மகனே கத்தியால் கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளார்.

52 வயதுடைய பெண்ணே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரான 27 வயதுடைய மகனைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாயில் வீடு மீது முகமூடிக் கும்பல் தாக்குதல்





யாழ்ப்பாணம் – மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் பகுதியில் உள்ள வீடு ஒன்று தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8:30 மணியளவில் பதிவானதாக பொலிசார் தெரிவித்தனர்.

முகத்தை கறுப்புத் துணியால் மூடி கட்டி வந்த நால்வர் உள்ளடங்கிய கும்பல் அத்துமீறி வீட்டினுள் பிரவேசித்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்ததுடன், குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, சோக்கேஸ் , சமையலறை உபகரணங்கள், தளபாடங்கள் என்பவற்றை அடித்து நொறுக்கி சேதம் விளைவித்துள்ளதுடன் இருமோட்டார் சைக்கிள்களை எரித்து விட்டு தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் தடயவியல் பொலிஸார் நேற்றுத் தடயங்களை ஆய்வுசெய்தனர்.

வீட்டிலிருந்த 20 வயது இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தியாவை நம்பி சவால் விடாதீர்!

தென்னிலங்கை அரசியலில் பௌத்த, சிங்கள இன வாதம் - பேரினவாத வெறி - மீண்டும் கொளுந்து விட்டெரிய ஆரம்பித்து இருக்கின்றது.

ஏற்கனவே 'நீறு பூத்த நெருப்பாக' கனன்று கொண்டிருந்த பேரினவாதம், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம் என்ற யோசனையை ஒட்டி மீண்டும் ஊதிப் பெருந்தீயாக மூள விடப்பட்டிருக்கின்றது.

அடுத்த வருடத்தைத் 'தேர்தல் ஆண்டு' என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள பின்னணியில், அப்போது பேரினவாதம் விளாசி முழு அளவில் எரியும் என எதிர்பார்க்கலாம். பேரினவாதத் தீயில்அரசியல் குளிர் காயும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் நிச்சயம் அதனைச் செய்வார்கள். அதற்கான காலமும் நேரமும் சூழலும் பொருந்தி வருகின்றன என்றே தோன்றுகின்றது.

பேரினவாதம் மீண்டும் உச்சம் பெறும் இச்சமயத்தில், அரசமைப்பின் 13 ஆம் திருத்தை ஒட்டி, அது விடயம் சூடு பிடிக்கத் தொடங்கி இருக்கின்றமையால், அதைத் தொடர்பு படுத்தி, தமிழ் அரசியல்வாதிகள் சிலர் நிலைமை புரியாமல் சில சவால்களை விடுகிறார்கள்.

மொட்டுக் கட்சியில் பேரினவாதம் கிளப்பும் ஒருவரைச் சாடுவதற்காக, முடியுமானால் 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து நீக்கிப் பாருங்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சவால் விடுகின்றார்.

மற்றொரு பேரினவாதியான உதய கம்மன்பில்லவைப் பார்த்து ரெலோவின் பிரமுகர் சபா குகதாஸும் இத்தகைய சவால் ஒன்றை விடுத்துள்ளார்.

உண்மையில் இத்தகைய சவாலை ஏற்று, வெற்றிகரமாக அதைச் செய்து முடிக்கக் கூடிய நிலையில்தான் பேரினவாதத் தரப்புகள் இன்று இருக்கின்றன.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று - பௌத்த, சிங்களப் பேரினவாத வாக்குகளை மட்டுமே நம்பி ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியும் என்ற சாதனையை கடந்த ஜனாதிபதி தேர்தலில் நிலைநாட்டிக் காட்டிய பேரினவாதத்திற்கு, 13ஐ நீக்குவோம் என்ற கோஷத்தை அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் முன்வைத்து, போதிய வாக்குகளைப் பெற்று, வென்று, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் 13ஐச் செல்லாக் காசாக்குவது இயலாத காரியமேயல்ல.

அடுத்தது - அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்திற்கு பின்புலமாக இருக்க வேண்டிய இந்தியா, அது தொடர்பில் தனது தார்மீகக் கடப்பாட்டையும் சர்வதேச இராஜதந்திரப் பொறுப்பையும் மறந்தும் துறந்தும் தசாப்தங்கள் கடந்து விட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை 35 ஆண்டுகளாகச் செய்விக்க இயலாத கையாலாகாத்தனத்தில் இருக்கும் இந்தியா - அதன் கண் முன்னேயே 13ஆம் திருத்தம் நீர்த்துப்போய், வாடி, வதங்கி, வெட்டிச் சுருங்கிப் போனதை வெறுமனே பார்த்து வாளாவிருக்கும் பாரதம் - அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுவதையும் பார்த்து வாளாவிருக்குமே தவிர, வேறு அதற்கு மேல் எதையும் செய்யாது என்பது திண்ணம்.

வேண்டுமானால் - ஆக மிஞ்சி மிஞ்சிப் போனால் - 'ஈழத் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யும் தீர்வு அவசியம் என வலியுறுத்துகிறோம்' என்ற தனது வழமையான அறிக்கைப் பல்லவியை அப்போதும் ஒரு தடவை இந்தியா திரும்பவும் இசைக்கும். அவ்வளவுதான்.

இந்தியா எமக்குப் பக்கபலமாக நிற்கும் என்று நம்பி, மனோ கணேசனோ, சபா குகதாஸோ பேரினவாதத்தோடு சவால் விடுவது புத்திசாலித்தனமானதேயல்ல.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த ஆண்டின் முற்பகுதியிலோ, மூன்றாம் காலாண்டிலோ ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடக்கும். அதில் வெற்றி பெறுபவர் அதன் பின்னர் தமக்குச் சாதகமான நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதற்காக,தற்போதைய நாடாளுமன்றத்தை நிச்சயம் கலைத்துப் புதிய பொது தேர்தலுக்கு உத்தரவிடுவார். சில சமயங்களில் வரக்கூடிய ஜனாதிபதி நிலைமை தமக்குச் சாதகம் என்றால் மாகாண சபைத் தேர்தலையும் கூடச் சேர்த்து நடத்த முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது, எப்படி என்றாலும் அடுத்த ஆண்டில் மக்களின் வாக்குகள் கவனத்தில் எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

ஆனால் இன்றைய நிலையில் தெற்கில் பெரும்பான்மை இனத்தவரின் எந்தக் கட்சியும் தனித்து வலுவான நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை.

கொழும்பில் மிகப் பிரபலமான கருத்துக் கணிப்பு மன்றம் ஜுலை மாதத்திற்கான கட்சிகளின் ஆதரவுத் தளம் பற்றிய கருத்துக்கணிப்பை வெளியிட்டிருக்கின்றது.

நீலன் திருச்செல்வம் நிதியம், சுகாதார நலன் ஆராய்வு தொடர்பான பிரிட்டிஷ் தேசிய நிறுவனம், ஆசிய மன்றம் ஆகியவற்றின் நிதி உதவியில் இயங்கும் இந்தக் கருத்துக் கணிப்பு அமைப்பு பெற்றுள்ள கருத்துக் கணிப்புகளின் படி ஐக்கிய மக்கள் சக்தி இப்போது 24 வீத மக்களினதும், ஜே.வி.பியை உள்ளடக்கிய கூட்டணி 23 வீத மக்களினதும் ஆதரவைப் பெற்றுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒன்பது வீத மக்களினதும், ஐக்கிய தேசியக் கட்சி எட்டு வீத மக்களினதும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மூன்று வீத மக்களினதும், இலங்கைத் தமிழரசுக் கட்சி நான்கு வீத மக்களினதும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஒரு வீத மக்களினதும் ஆதரவை பெற்றுள்ளன.

30 வீதமான மக்கள் தாங்கள் யார் பக்கம் என்பதை இன்னும் தெளிவுபடுத்தவில்லை.

ஐ.எச்.பி. நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனர் டாக்டர் ரவி ரன்னன் எலிய "பிந்திய புள்ளி விவரங்கள் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற தெளிவற்ற நிலையில் அதிகம் இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. எந்தப் பெரிய கட்சியும் குறிப்பிடத்தக்களவு முன்னணியில் இல்லை. வரும் மாதங்களில் ஆதரவு நிலை மாற்றம் அடைவதற்கான சாத்தியக்கூறுகளே இதில் தென்படுகின்றன" – என்கிறார்.

மக்களின் கருத்து நிலையை கணிப்பது தொடர்பான கல்வியில் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் விசேட பயிற்சியைப் பெற்ற கலாநிதி ரவி ரன்னன் எலிய, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் இத்தகைய பல்வேறு கருத்துக் கணிப்புகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதான் தென்னிலங்கை மக்களின் கருத்து நிலைப்பாடு என்றால் ஜனாதிபதித் தேர்தலிலும், அதை அடுத்து வரக்கூடிய பொதுத் தேர்தலிலும், ஆங்கிலத்தில் neck and neck என்று கூறுவது போல மிக நெருக்கமான போட்டி இருக்கும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

தென்னிலங்கையின் கடும் போட்டியாளர்கள் மத்தியில் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களின் வியூகங்களைச் சரியாக வகுத்து, வாக்குகளைத் தந்திரமாகப் பயன்படுத்தி, தங்கள் இலக்குகளை அடைவதோடு பாதைகளையும் உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியமாகும்.

சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இது பற்றிப் புரிந்து கொண்டு இதனைக் கவனத்தில் கொண்டால் நல்லது.

## கொழும்பில் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் தொடர்பான மேலதிக விவரம் வெளியாகவில்லை.

## விடுதலைப் புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பானது வவுனியா ஸ்ரீ போதி தக்சனாராமய விகாரையில் நேற்று இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இச்சந்திப்பின் மேலும் கருத்து தெரிவித்த மத தலைவர்கள் –

குருந்தூர் மலை விடயமானது தொல்பொருள் திணைக்களத்திற்குரியது. இதனை தனி ஒரு மதம் மட்டும் தனக்கானது என உரிமை கொண்டாடக் கூடாது.

சிங்கள, பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது. ஆனால் தமிழ் பௌத்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பதுவே உண்மை. தெற்கில் சம்பந்தமே இல்லாமல் சிங்கள பௌத்த கிராமத்திற்குள் கிறிஸ்தவ மதகுருவோ அல்லது சைவ பூசகரோ வந்து தங்கள் தளம் எனக் கூறி உரிமை கொண்டாடினால் சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக் கொள்வார்களா அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா..? அவ்வாறிருக்கும் போது தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர் மலைப் பகுதியில் பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால் தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்

வணக்க ஸ்தலங்கள் எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியவை. சிங்கள பௌத்தம் என்றில்லாமல் நாங்கள் இலங்கையர்கள். யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலைக்கு நாங்கள் சிந்திக்க வேண்டும்.

மேலும் ஒரு சிலர் இவ்விடயத்தினை அரசியலாக்கி இனங்களுக்கிடையிலான முறுகலினை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர்.

இவ்வாறான தொல்பொருள் பகுதிக்கான இடத்தின் முழுப்பொறுப்பினையும் தொல்பொருள் திணைக்களம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். இதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக்கூடாது. – என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த ஊடக சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம் பலாகஸ்வெவ விமசாரநாயக்க தேரர், நாகதீப ரஜமகா விகாரை விகாராதிபதி பூஜ்ய தவத கல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக்கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம சுமனதிஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், கணேசபுரம் கருமாரி நாக பூசணி அம்மன் ஆலய பிரதம குரு பிரமசிறி பூ.முகுந்தன்சர்மா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வாய்ச் சவடால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் சவால் விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

“நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்லத் திரைமறைவில் நடக்கும் ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சிகள் தவிடுபொடியாகும்” என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதே வேளை, ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களையும் எந்நேரமும் எதிர்கொள்ள மொட்டுக் கட்சி தயாராகவுள்ளது என்று பஸில் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

மேற்படி இருவரினதும் கருத்துக்களுக்குச் சஜித் பிரேமதாஸ பதில் வழங்கும்போது –

“தேசியரீதியில்தேர்தல்ஒன்றுநடந்தால் ரணில் – மொட்டு அரசு கவிழ்வது உறுதி. இதைச் சமாளிக்கவே ஜனாதிபதி ரணிலும், மொட்டுவின் உரிமையாளர் பஸிலும் வாய்ச்சவடால் விடுகின்றனர். அவர்களிடம் நாம் கேட்டுக்கொள்வது என்னவெனில், வாய்ச்சவடால் விட வேண்டாம் துணிவு இருந்தால் தேர்தல் ஒன்றை உடனடியாக நடத்திக் காட்டுங்கள்.

அந்தத் தேர்தலில் இவர்களின் முகத்திரை கிழியும். மக்களின் ஆணை எமக்குக் கிடைக்கும்.” – என்றார்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அக்கட்சியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

”தேர்தல் எப்போது நடக்கும் என்று என்னால் கூற முடியாது. அதற்கான அதிகாரம் என்னிடம் இல்லை.

மக்கள் ஆணை இன்னமும் எமக்கு இருக்கின்றது. அதனால்தான் மொட்டு அரசின் ஆட்சி தொடர்கின்றது. மொட்டு வீழ்ந்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் கனவு காணக்கூடாது.

மொட்டு இன்னமும் வீரியத்துடன் எழும். மூவின மக்களையும் அரவணைத்தே நாம் பயணிப்போம்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் சிங்கள மக்களின் ஆணை மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் மக்களின் ஆணையும் மொட்டுக் கட்சிக்குக் கிடைக்கும்.” – என்றார்.

## வீரவசனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சவில்லை. நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து இருக்கும்போது தேர்தலை எப்படி நடத்துவது? நாடு இப்போதுதான் மெல்ல மெல்ல மீண்டெழுந்து வருகின்றது. இந்த உண்மை நிலை எதிர்க்கட்சிகளுக்கு விளங்கும்.

பெரும்பாலும் அடுத்த வருடம் (2024) தேர்தல் வருடமாகவே இருக்கும் என நான் நினைக்கின்றேன். எந்தத் தேர்தல் முதலில் நடைபெறும் என்று இப்போது கூற முடியாது. ஆனால், அடுத்த வருடம் தேர்தல் ஆண்டு என்பது நிச்சயம்.

இப்போதுஎம்மைக்கண்டபடிவிமர்சித்து அரசியல் மேடைகளிலும், ஊடகங்கள் முன்னிலையிலும் வீரவசனம் பேசுவோர் தேர்தல் காலங்களில் தோல்வியடைந்தே போவார்கள். மக்களை அவர்கள் முட்டாளாக்க முடியாது.” – என்றார்.

## ரணில் – மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகன் அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தார் என்று கூறப்படுகின்றது.

ஆனால், மஹிந்தவின் மூத்த மகன் நாமல் இதற்கு எதிர்ப்பு என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலர் சபைக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ராஜபக்ஷ குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான எம்.பி. ஒருவரே ரணிலும் மஹிந்தவும் இரகசியமாகச் சந்தித்து உரையாடிய தகவலை அம்பலப்படுத்தியுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732




# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




# சட்ட விரோத மணல் அகழ்வு கிளிநொச்சியில் மிகமும்முரம்



கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சட்ட விரோத மணல் அகழ்வுக் குற்றங்கள் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கைமீறிச் செல்கின்றன எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறான சட்ட விரோத மணல் அகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன எனவும், குறிப்பாக, கடலுக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் அதிகமாக சட்ட விரோத அகழ்வுச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முழுக் கிராமமும் பாதிக்கப்படுகின்ற ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ள பிரதேச மக்கள், இச்செயற்பாடுகளை கட்டுப்படுத்தத் தவறினால், எதிர்காலத்தில் தமது ஊர்களைத் தாம் இழந்துவிட நேரிடும் எனவும் கவலையோடு கூறியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு, உமையாள்புரம் விளாவோடை, தட்டுவன்கொட்டி, இரணைமடு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள், ஊரியான், முரசுமோட்டை, பெரியகுளம், கிளாலி உள்ளிட்ட பல பிரதேசங்களில் தொடர்ச்சியாகச் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கினால், அன்றிரவே தங்கள் வீடுகள் தாக்கப்படும் அல்லது தங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்பது போன்ற அச்சுறுத்தல்களையும் அந்த மக்கள் எதிர்கொள்கின்றனர்.

இதுபோன்ற அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் காரணமாகவே பொது மக்களாகிய தாம் அமைதி காக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும், சட்ட விரோத அகழ்வு சார்ந்து மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டு சென்றபோதும், இதுவரை யாராலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கும் பொது மக்கள், சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களில் பலர் அரசியல் தரப்புகளின் செல்வாக்குள்ளவர்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# வறட்சியால் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய காணிகள் பாதிப்பு!



நாட்டில் நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக 50 ஆயிரம் ஏக்கர் விவசாய காணிகள் அழிவடைந்துள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

உடவலவ பிரதேசத்தில் மாத்திரம் ஏற்பட்ட சேத விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கு 5 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# நிர்வாண கோலத்தில் போய் மேயர் வீட்டைத் தாக்கியவர்

## ஹொரணையில் நடந்த சம்பவம்



ஹொரணை மாநகர சபையின் முன்னாள் தலைவர் விதானகே சிறிசோமவின் வீட்டின் மீது குடிபோதையில் இருந்த நபர் இரும்புக் கம்பியால் தாக்குதல் நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் முன்னாள் மேயரின் மகள் மற்றும் சகோதரி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். சில தளபாடங்கள் மற்றும் வீட்டின் கதவுகள் சேதமடைந்துள்ளன.

தாக்கிய நபர் வீட்டில் இருந்த வளர்ப்பு நாயைக் கொடூரமாகத் தாக்கியனார் என வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேயர் பணியில் இருந்த போது இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவத்திற்கு பழிவாங்கும் வகையில் இந்த நபர் குடிபோதையில் நிர்வாணமாக வந்து தாக்குதல் நடத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது

அந்த நபர் ஆடையின்றி இரும்பு கம்பியை எடுத்துச் செல்வதை, அருகில் இருந்தவர்கள் மொபைல் போனில் பதிவு செய்துள்ளனர்.

சம்பவத்தையடுத்து உடனடியாக ஹொரணை பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளதனர். சந்தேகநபர் நேற்று ஹொரணை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தார்

# சுற்றுலா வீசா மூலம் சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோரை மடக்கப் பிரிவு




சுற்றுலா வீசாக்களை பயன்படுத்தி சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோரை தடுக்கும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு, குடியேறிகள் மேம்பாட்டு பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் இந்த பிரிவு நேற்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் மனித கடத்தலுக்கு எதிரான தேசிய செயலணியின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தப் புதிய பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் அரச புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள்

இந்தப் பிரிவில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

# மன்னார் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



(மன்னார் நிருபர்)

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் பயணித்த இரு வாகனங்கள் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று திங்கள் மாலை மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி யில் தலைமன்னார் பொலிஸ் பிரிவான பருத்திப் பண்ணையில் இடம் பெற்றுள்ளது.

தலை மன்னார் ஊர்மனையைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தையின் தந்தையான லோறன்ஸ் மனோகரன் நிசாந்தன் (வயது- 32) என்பவரே விபத்துக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மனோகரன் நிசாந்தன் பேசாலையில் இருந்து தனது மோட்டர் சைக்கிளில் தனிமையாக தனது கிராமமான தலைமன்னார் ஊர் மனைக்கு பயணித்துக் கொண்டிருந்த போது வெளி மாவட்டத்திலிருந்து சுற்றுல்லா வந்த ஹயஸ் ரக வாகனம் தலைமன்னார் ஊர்மனையிலிருந்து மன்னாருக்கு வந்த போது இரண்டு வாகனங்களும் மோதி இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இறந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு உடற் கூற்று பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளுடன் மோதுண்ட வாகனம் தலைமன்னார் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.





# நீரிழிவு நோயாளியான பெண் தவறான மருந்தினால் மரணம்

## இங்கிரிய பிரதேசத்தில் சம்பவம்



நீரிழிவு நோயாளிக்கு புற்றுநோய்க்குரிய மருந்தை தவறுதலாக வழங்கியதால் அவர் உயிரிழந்த சம்பவம் ஹொரணை இங்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு புற்றுநோயாளிகளுக்குரிய மருந்துகளை தனியார் மருந்தகம் வழங்கியதாக உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இங்கிரிய மேல் ஊராகல பிரதேசத்தில் வசித்து வந்த 62 வயதான திருமதி பி.எம்.சோமாவதி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சில காலமாக உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் அவதிப்பட்டு வந்த அவர், ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அதன்படி, கடந்த 31 ஆம் திகதி அவரது கணவர் மருத்துவமனைக்கு தேவையான மருந்துகளை எடுத்து வர நோயறிதல் அறிக்கைகளுடன் சென்றுள்ளார். அங்கு அவருக்கு மருத்துவமனையில் இருந்து சில மருந்துகளை கொடுத்துவிட்டு, மருத்துவமனையில் இல்லாத சில மருந்துகளை தனியார் மருந்தகத்தில் வாங்கச் சொன்னார்கள்.

அதன்படி இங்கிரியில் உள்ள தனியார் மருந்தகத்தில் பெறப்பட்ட மருந்துகளை சுமார் ஒரு வார காலம் பயன்படுத்திய போது திருமதி சோமாவதி சில சிரமங்களை அனுபவித்தார். கடந்த 10ஆம் திகதி திடீரென சுகவீனமடைந்த திருமதி சோமாவதியை உடனடியாக வைத்தியசாலையில் உறவினர்கள் அனுமதித்த நிலையில், அவரது நோய்க்கான காரணம் கண்டறியப்பட்டது.

அவருக்கு என்ன மருந்து கொடுக்கப்பட்டது என்று தாதி சரிபார்த்துள்ளார். அந்த நேரத்தில்தான் தவறான மருந்து வழங்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை அடையாளம் கண்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் இங்கிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாக 83 லட்சம் ரூபாவைச் சுருட்டியவர் கைது!

ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 83 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை மோசடி செய்த நபரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கைது செய்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 16ஆம் திகதி இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

இராஜகிரிய பகுதியை சேர்ந்த சந்தேக நபர் ருமேனியாவில் தொழில் வழங்குவதற்காக 83 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டார் எனவும், அவர் வாக்குறுதியளித்தபடி வேலை வழங்கவில்லை எனவும் பணியகத்திற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்த முறைப்பாட்டிற்கு மேலதிகமாக சந்தேகநபருக்கு எதிராக பணியகத்திற்கு 9 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தலா 5 இலட்சம் ரூபா மற்றும் 3 சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் விசாரணை மார்ச் 11, 2024 அன்று நடைபெற உள்ளது.

வெளிநாட்டு வேலைகளைப் பெறுவதற்கு எந்தவொரு நிறுவனத்திற்கோ அல்லது நபருக்கோ பணம் அல்லது கடவுச்சீட்டை வழங்குவதற்கு முன், பணியகத்தின் இணையதளமான www.slbfe.lkஐப் பார்வையிடுமாறும், வெளிநாட்டு வேலைகளுக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான சரியான உரிமம் ஏஜென்சிக்கு உள்ளதா மற்றும் அதற்கான வேலை உத்தரவை நிறுவனம் பெற்றுள்ளதா என்பதைக் கண்டறிவதோடு அது ஒரு செல்லுபடியாகும் வேலைவாய்ப்பு நிறுவனமாக இருந்தாலும் கூட, 1989 ஹாட்லைனை அழைப்பதன் மூலம்மேலதிக தகவல்களைப் பெறுமாறும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கேட்டுக் கொள்கிறது.

# அப்பாவிச் சிங்களவரைப் பகடைக் காயாக பயன்படுத்த முனைகிறார் உதய கம்மன்பில

## ரெலோப் பிரமுகர் சபா குகதாஸ் விசனம்

அப்பாவிச் சிங்கள மக்களைப் பகடைக் காயாகப் பயன்படுத்த முனைகிறார் கம்மன்பில என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ரெலோப் பிரமுகருமான சபா குகதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தாம் ராஜபக்ஷ முகாமில் இருந்து வெளியேறிய பின்னர் தன்னுடைய வாக்கு வங்கியை இனவாத ரீதியாக தக்க வைக்க அப்பாவிச் சிங்கள மக்களைப் பகடைக் காயாகப் பயன்படுத்துவதற்கு தமிழர்கள் தொடர்பாக இனவாதக் கருத்துக்களைக் கக்கி வருகின்றார்.

அண்மைய நாள்களில், தமிழர்கள் சமஷ்டி கேட்டால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்றார். பின்னர் குருந்தூர் மலையை காப்பாற்ற சிங்கள மக்களை பொங்கி எழுமாறு அறை கூவினார்.

பதினாமூன்றாம் திருத்தம் நடைமுறைக்கு வந்தால் நாடு பிளவடையும் என்றார். தற்போது கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளை சிங்கள மக்களை கொண்டு விரட்டப் போகின்றார் எனஅறிக்கை விட்டுள்ளார்.

தமிழர்களைப் பயன்படுத்தி கடந்த காலத்தில் சில இனவாதிகள் வாக்குகளைப் பெற்றமை போல தானும் பெற்று விடலாம் என்ற நப்பாசையில் அப்பாவிச் சிங்கள மக்களைத் தவறாக வழி நடத்த முனைகிறார் கம்மன்பில.

கம்மன்பில கூறியவற்றுள் தற்போதைய அரசியலமைப்பில் உள்ள பதின் மூன்றாவது திருத்தத்தை முடிந்தால் நீக்கி காட்ட முடியுமா? வெறும் வாய்ச்சவடாலை விட்டுச் செயலில் காட்டுங்கள்.



குருந்தூர்மலைக்கு வழிபாட்டுக்கு வாருங்கள் என ஏமாற்றி, அப்பாவிச் சிங்கள மக்களை பஸ்களில் ஏற்றி வந்ததை தமிழர்கள் அறிய மாட்டார்கள் என நினைக்கிறார்.

கடந்தகால இனவாதத்தால் நாடு இந்த சீரழிவு நிலைக்கு வந்தது என்பதை அப்பாவிச் சிங்கள மக்கள் உணராவிட்டால் உதய கம்மன்பில போன்றோரின் இனவாதப் பிழைப்பு தொடரும். – எனவும் கூறியுள்ளார்

# சீன ஆராய்ச்சிக் கப்பலை அனுமதிப்பதா? வெளிவிவகார அமைச்சகம் குழப்பத்தில்!




இலங்கை கடற்பரப்பில் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து, புவிசார் அரசியல் போட்டியாளர்கள், சந்தேகம் கொண்டுள்ளமையால் இலங்கைக்கு வரவிருக்கும் சீனஆராய்ச்சிக் கப்பலான SHI YAN 6 க்கு அனுமதி வழங்குவதில் வெளியுறவு அமைச்சகம் குழப்பத்தில் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் பயணிக்கும் இந்த ஆராய்ச்சி கப்பல், இலங்கை தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் (NARA) இணைந்து ஆராய்ச்சியை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கமைய சீன அதிகாரிகள் அதற்கான அனுமதியை கோரியுள்ளனர். ஆனால் வெளியுறவு அமைச்சகம் இன்னும் முடிவு செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டு சக்திகளின் புவிசார் அரசியல் போட்டியை எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்த கேள்விக்கு மத்தியிலேயே இலங்கை வெளியுறவு அமைச்சு சிந்திப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் சீன கப்பலுடன் கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு நாரா ஆர்வமாக இருப்பதாகவும், எனவே குறித்த கப்பல் நாட்டிற்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் நாரா வலியுறுத்தியுள்ளது. இதேவேளை இந்தியாவின் கவலைகள் இருந்தபோதிலும் சீனாவும் கப்பலை அனுப்ப ஆர்வமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 25ம் திகதி இலங்கைக்கு வரும்

# சொப்பன சுந்தரி

### குஷியாகக் காத்திருக்கும் இளைஞர்கள்

கரகாட்டக்காரன் காலம் முதலாய் அனேகமானோரால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் 'சொப்பன சுந்தரி' யை மாதவனும் அவரது சினிமா நண்பர்களும் சுமார் ஆறு வருடங்களாக மறைத்து வைத்திருந்திருக்கிறார்கள். இதற்கு மேலும் ஒளித்து வைத்திருப்பது நல்லதல்ல என்று நினைத்தவர்கள், எதிர் வரும் ஓகஸ்ட் 25ஆம் திகதி 'சொப்பன சுந்தரி'யை ரிலீஸ் செய்யப் போவதாக அறிவித்ததில் இருந்து இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு உருவாகி யுள்ளது.

**யார் இந்தக் குழுவினர்? ஏன் இவர்கள் ஆறு வருடங்களாகச் 'சொப்பன சுந்தரி'யை மறைத்து வைத்திருந்தார்கள்?**

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே பல குறும்படங்கள் மூலமாக இலங்கைத் திரைத் துறையினரின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்தவர் இயக்குனர் மாதவன் மகேஸ்வரன். 'அப்பால்', 'என்னாச்சு?' போன்ற குறும்படங்கள் மூலம் நன்கு அறியப்பட்ட மாதவன், வெவ்வேறு விருது விழாக் களில் பல விருதுகளைத் தனது குறும்படங்கள் மூலம் வென்றுள்ளார். இந்த இளம் இயக்குனர் தன் சினிமா நண்பர்களின் கூட்டணியில் இயக்கியி ருக்கும் முதலாவது முழுநீளத் திரைப்படமே 'சொப்பன சுந்தரி'.

2017ம் ஆண்டில் படமாக்கப்பட்டு, சுமார் ஆறு வருடங்களாக பின்களத் தயாரிப்புப் பணி களில் இருந்த 'சொப்பன சுந்தரி' பல சவால் களைத் தாண்டி இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வந்து ரசிகர்களைக் குஷிப்படுத்தப் போகிறது.

இலங்கையில் தமிழில் உருவாக்கப்படும் முழுநீளத் திரைப்படங்கள் பல இப்போது வெளி வந்த வண்ணம் இருக்கின்ற இந்த சூழலில் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப் பட்டிருக்கும் 'சொப்பன சுந்தரி'யும் திரைக்கு வருவது, இலங்கையின் தமிழ் சினிமாத்துறை மும்முரமாக இயங்கத் தொடங்கி விட்டது என்பதற்கான அடையாளமே!.




மாதவனின் ஆஸ்தான கதாசிரியரும் நடிகருமாகிய ஜோயல், 'சொப்பன சுந்தரி'க்கான கதை, திரைக்கதையை எழுதி, ஒரு பிரதான கதாபாத்திரத்திலும் நடித்திருக்கின்றார்.கொழும்பு நகரைக் கதைக்களமாக கொண்டு உருவாகி யிருக்கும் இத்திரைப்படத்தில், இலங்கையின் புகழ் பூத்த கதாநாயகி நிரஞ்சனி சண்முகராஜா 'சுந்தரி' கதாபாத்திரத்திலும், அவருடன் இணைந்து பேர்ழிஜா, கஜானன், நரேஷ், தனுஷ் செல்வ நாதன், வருண் துஷ்யந்தன், ரவி, ஜெனோஷன் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திரு க்கிறார்கள். இயக்குனர் மாதவனும் ஓர் பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

ஒரு பெரும் சிக்கலில் சிக்கிக் கொள்ளும் மூன்று நண்பர்களும், அவர்களுக்கு விளையும் வில்லங்கங்களும் என்று விறுவிறுப்பான இரண் டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர் திரப்படபடமாக 'சொப்பன சுந்தரி' தயாராகி இருக்கிறது.

எல் எக்ஸ்ரீமோ, என்னாச்சு? என்று குறும்படங்கள் மூலம் தங்களின் ஒத்திகைகளைப் பார்த்து வைத்திருந்த மாதவனும் நண்பர்களும் அடுத்து ஒரு முழுநீளத் திரைப்படத்தை எடுக்கலாம் என்று 2017ம் ஆண்டு முடிவு செய்தார்கள். அந்த முடிவின் விளைவாக காதல், கொமெடி, பாடல்கள், ஆக்ஷன், ட்விஸ்ட் என முற்றுமுழுதான கொமெர் ஷல் பாணியில் இந்த 'சொப்பன சுந்தரி'யை உருவாக்கியிருக்கிறார்கள்.

**சொப்பன சுந்தரி திரையிடப்படும் திரையரங்கு விபரங்கள் இதோ:**

SAVOY 3D - WELLAWATE
CONCORD - DEHIWALA
REGAL - DEMATAGODA
PVR - COLOMBO (FROM SEPT 01)
REGAL - JAFFNA
NELSON - TRINCOMALEE
GK CINEMAX - KALMUNAI
AMUTHA CINEMA - VAVUNIYA




## இரண்டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர்

கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகத் தயாரிப் பாளர்களின் முதலீட்டிற்காக காத்திருந்த 'சொப்பன சுந்தரி', பின்னர் மாதவன், கஜானன் மற்றும் ஜோயலின் சொந்தத் தயாரிப்பில் 2017ம் ஆண்டின் பிற்பகுதியில் படமாக்கப்பட்டது. சமல் விக்ரமசிங்க வின் ஒளிப்பதிவிலும், இயக்குனர் மாதவனின் படத் தொகுப்பிலும் உருவாகி இருக்கும் காட்சிகளுக்கு இசையமைத்திருக்கிறார் பிரபல இசையமைப்பாளர் ஜீவானந்தன் ராம். ஜீவாவின் மெட்டுகளுக்கு வருண் துஷ்யந்தன், ராகுல் ராஜ் மற்றும் சங்கர் வரிகள் எழுதியுள்ளனர்.




இத்திரைப்படத்தின் படப்பிடிப்பிற்குப் பின்ன ரானதொழில்நுட்பப்பணிகளையும்செய்துகொண்டு, அதே கலைஞர்களின் கூட்டணியில், 2020ஆம் ஆண்டில் **'SUNDAY'** எனும் இணையத் தொடரையும் Dialog நிறுவனத்தின் VIU செயலிக்காக மாதவன் இயக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத் தொடரில் பேர்ழிஜா முதன்மைக் கதாபாத்திரத்தி லும், இலங்கை சினிமாத் துறையில் பலரது அன்பையும் வென்ற கலைஞன் அமரர் தர்ஷன் தர்மராஜ் அவர்கள் ஒரு பிரதான பாத்திரத்திலும் நடித்திருந்தனர்.

இலங்கையில் இன்னும் ஒரு முற்று முழுதான தொழிற்துறையாக மாற்றம் பெறாத தமிழ் திரைப்படத் துறையில் ஒரு முழுநீளத் திரைப் படைத்தைத் தயாரித்து வெளியிடுவது என்பது, அதுவும் தயாரிப்பாளர்கள் யாருமே இல்லாமல் இம்மாபெரும் இலக்கை ஆறு வருடங்களாகப் போராடி அடைவது என்பது உண்மையிலேயே ஒரு உன்னதமான சாதனைதான். இக்கூற்றை வழி மொழிவதைப்போல அமைந்திருக்கிறது, ஜூலை மாத ஆரம்பத்தில் இணையத்தில் வெளியான 'சொப்பன சுந்தரி' ட்ரெய்லர் இளைஞர்கள் மத்தியில் பெற்று வரும் அமோகமான வரவேற்பு.


சொப்பன சுந்தரி படக் குழுவில் சிலர்

ஒரு நண்பர் பட்டாளத்தின் உழைப்பிலும், பெரும் பொருட்செலவிலும் உருவாகி, ஆறு வருட விடாமுயற்சியால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வரும் 'சொப்பன சுந்தரி', பார்ப்பவர்களை சிரித்து மகிழ வைக்கப் போவதும், இளைஞர்களால் மகிழ்ந்து கொண்டாடப்படப் போவது நிச்சயம்.

# மாட்டைக் களவாடி விற்ற பொலிஸ் அலுவலர் கைது

திருகோணமலை-பாத்தியகம பகுதியில் மாடு ஒன்றைத் திருடி மற்றுமொரு நபருக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனக் கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேகநபரை நேற்றுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தளாய் -பாத்தியகம பகுதியைச் சேர்ந்தவரின் மாடு காணாமல் போயுள்ளதாக கடந்த ஜுன் மாதம் 26 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டை அடுத்து, இன்னுமொரு நபர் அந்த மாட்டை வளர்த்து வருகிறார் எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விசாரணைகளை முன்னெடுத்த போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அந்த மாட்டைத் தாம் வாங்கினார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் கந்தளாய் - வென்றாசன்புர பகுதியில் வசித்து வரும் பொலிஸ் உத்தியோகத்தரை தாங்கள் கைது செய்துள்ளனர்




எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கந்தளாய் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# கொடிகாமத்தில் ஞாயிறு இரவு இடம்பெற்ற இரு விபத்துகள்

நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் நான்கு வாகனங்கள் மோதிக் கொண்டன. அதிசொகுசு பயணிகள் பஸ்ஸின் பயணிகள் அதிஷ்டவசமாகத் தப்பித்துக் கொண்டனர். சாரதிகளின் கவனயீனம் மற்றும் அதிவேகமே இவ்விபத்துகளுக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

"ஏ9" பிரதான வீதியில் கொடிகாமம், கோயிலாமனை சந்திக்கு அண்மையாக திருமண மண்டபம் முன்பாக இவ் விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 11.30 மணியளவில் ஒரே தளத்தில் நான்கு வாகனங்கள் மோதிக் கொண்டன.

யாழ். - கொழும்பு அதிசொகுசு பயணிகள் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னே பயணித்துக் கொண்டிருந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் கார் பலத்த சேதங்களுக்குள்ளானது.

இவ் விபத்து இடம்பெற்று கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த வேளை அப்பகுதியில் மேலும் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகின. யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து கொடிகாமம் நோக்கி பெட்டியில் கதியால்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த டிராக்டரின் வருகையை அவதானிக்காமல் எதிரே வந்த பாரவூர்தி ஒன்று மோதிக் கொண்டது.

இந்த விபத்துத் தொடர்பிலும் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு விபத்துக்குள்ளான நான்கு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதிசொகுசு பயணிகள் பஸ் அதி வேகமாகவே யாழில் இருந்து பயணித்ததாகவும், மோசமான சாரதியத்தினாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக பஸ்ஸில் பயணித்த பயணிகள் ஆவேசமாக கத்திச் சத்தம் போட்டு சாரதியுடன் முரண்பட்டனர் எனவும், கொடிகாமம் பொலிஸாரின் தலையீட்டையடுத்து நிலமை கட்டுக்குள் வந்தது எனவும் கூறப்பட்டது.

விபத்துத் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

**ரயிலில் தவறவிடப்பட்ட நிலையில்**

# நகைகளுடன் மீட்கப்பட்ட பை உரிமையாளர்களிடம் சேர்ப்பு

உரிமையாளர்களால் மாத்தறையில் இருந்து கொழும்பு, கோட்டை நோக்கி பயணித்த ரயிலில் தவறவிடப்பட்ட 50 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள், பொருள்கள் அடங்கிய பை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் வசித்து வந்த குடும்பத்தினர் மாத்தறை பகுதியில் இருந்து கண்டி நோக்கி பயணித்து கொண்டிருந்த போது இவ்வாறு பையை தவறவிட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அந்த ரயிலை மாளிகாவத்தைத் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கு முன்னர் அதனைச் சோதனையிட்ட போது அங்கு தவறவிடப்பட்ட பை ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனைப் பாதுகாப்பு பிரிவினர் சோதனையிட்ட போது 3 பவுண் தங்க மாலை, தங்க நகைகள், ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி, 35 லட்சம் ரூபாய் சேமிப்பு சான்றிதழ், வங்கி புத்தகங்கள், கார் உரிமம் உள்ளிட்ட பொருள்கள் இருந்துள்ளன.

அதனையடுத்து பையை சோதனையிட்ட மாத்தறை ரயில்வே பாதுகாப்பு அலுவலக உத்தியோகத்தர்களான ஏ.கே. லங்கனந்தா மற்றும் எல்.டி பிரியங்கர ஆகியோர் பையை ரயில்வே பாதுகாப்பு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், ரயில் பாதுகாப்பு அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் இந்த பையின் உரிமையாளரை தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைவாக அனைத்து ரயில் நிலையங்களிலும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது.

இதற்கிடையில் பையில் இருந்த வங்கிப் புத்தகத்தின் முகவரி மூலம் மாத்தறை, பலடுவ பிரதேசத்தில் உள்ள உரிமையாளர்களின் முகவரி கண்டுபிடிக்கப்பட்டு தங்கம் உள்ளிட்ட சொத்துக்களை உரியவர்களிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

# மூத்த விநாயகர் இராஜ கோபுர கும்பாபிஷேகம்



யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் மூத்த விநாயகர் கோயில் பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 6.05 மணிக்கு கர்மாரம்ப கிரியைகள் தொடங்கின.

சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்த ராஜக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்திவருகிறார்.

# குப்பைக்குள் வீசப்பட்ட எட்டுப் பவுண் தங்க நகைகளை மீட்டுக் கொடுத்த சாவகச்சேரி நகரசபை பணியாளர்கள்!

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட மண்டுவில் வட்டாரத்தில் வசிக் கின்ற குடியிருப்பாளர் ஒருவரினால் வீதி யில் குப்பைகளோடு வீசப்பட்ட சுமார் பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான



8 பவுண் தங்க நகைகள் நகராட்சி மன்ற குப்பை மேட்டிலிருந்து சுகாதாரப் பகுதி யினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு உரி மையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:- சாவகச்சேரி மண்டுவில் வட்டாரத்தில் வேலுப்பிள்ளை வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் தனது வீட்டில் உள்ள சுமார் 8 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளை யர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக் கில் பழைய துணி ஒன்றில் கட்டி குப் பைகள் போல வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் அவரது வீட்டை சுத்தம் செய்கின்ற பொழுது அந்த நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன. இந்நிலையில் இன்றைய தினம் மண்டு வில் வட்டாரத்தில் வழமையான கழிவகற் றும் நடவடிக்கையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டிருந் தனர்.

இதன்போது அந்த வீட்டில் முன்னால் இருந்த குப்பைகளும் சுகாதார தொழிலா ளர்களால் அகற்றப்பட்டு டிராக்டரில் நக ராட்சி மன்றத்திற்குச் சொந்தமான குப் பைகள் தரம் பிரிக்கின்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கொட்டப்பட்டுள் ளன.

இந்நிலையில் வீட்டிலிருந்த நகைகள் காணாமல் போனதையடுத்து நிலை மையை உணர்ந்த உரிமையாளர் குப்பைக ளோடு நகைகளும் வீதியில் கொட் டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரீவீ கமராக்களை சோதனையிட்டுள்ளார்.

அப்பொழுது நேற்றுக் காலை அப்பகு தியில் நகராட்சி மன்ற கழிவகற்றும் வாக னம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டிருந்த மையை அவதானித்துள்ளார். இதை அடுத்து உடனடியாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு சென்று பிரதம நிர்வாக அதிகாரி செ.அனுசியாவிடம் நிலைமை தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து உடனடியாக செயற்பட்ட நகராட்சிமன்ற நிர்வாக அதிகாரி மற்றும் நகராட்சி மன்ற சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்களான பா.தயாகரன், மற்றும் பா.நிஷாந்தன் ஆகியோர் நக ராட்சி மன்ற கழிவு சேகரிக்கும் இடத்திற்கு வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளே இருந்து வெளியேயும் எவரையும் அனும திக்காத வண்ணம் செயற்பட்டு சுகாதார தொழிலாளர்களைக் கொண்டு தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த குடியிருப்பாளர் பழைய துணியில் கட்டி குப்பைகளோடு



குப்பையாக வீதியில் வீசிய சுமார் 8 பவுண் நகைகள் குடியிருப்பாளரின் முன்னிலை யிலேயே சுகாதார தொழிலாளியான




சண்முகம் தமிழரசனால் மீட்கப்பட்டு உட னடியாகவே உரிமையாளரிடம் ஒப்படைக் கப்பட்டன.

நகராட்சி மன்ற சுகாதார பகுதின ரின் நேர்மையான – விரைந்த – செயல் பாடு நகராட்சிமன்ற குடியிருப்பாளர் கள் மற்றும் நகர வர்த்தகர்கள் மத்தி யில் வரவேற்பையும் பாராட்டையும் பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகரசபை எமது எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கழிவகற்றும் நடவடிக்கைகள் கிரமமாக மேற்கொள்கின் றன.

எனவே நகரசபையின் அறிவுறுத்தல் களைப் பின்பற்றி வீதியில் கழிவுகளை கொட்டாமல் இருந்தால் இவ்வாறான சம்பவங்களையும் தவிர்த்துக் கொள்ள லாம் என நகரசபை சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்றாஜ் தெரிவித்துள்ளார்.

# பரந்தன் கிணற்றில் இருந்து நேற்றும் வெடிபொருள்கள் படையினரால் மீட்பு





கிளிநொச்சி – பரந்தனில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட வெடிப் பொருள்களை மீட்கும் நடவடிக் கையில் விசேட அதிரடிப்படையினர் நேற்றும் ஈடுபட்டனர்.

இந்தப் பிரதேசத்தில் காணி உரி மையாளரால் நேற்றுமுன்தினம் கிணறு ஒன்று துப்புரவு செய்யப்பட்ட பொழுது, அங்கு பல்வேறு வகையான வெடி பொருள்கள் மற்றும் இலத்திரனி யல் உபகரணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கிணற்றில் இருந்து வெடி பொருள்கள் அப்புறப்படுத்தப்பட்டு கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று நேரில் பார்வை யிட்ட பின்னர் நேற்று நீதிமன்ற அனும தியுடன் சிறப்பு அதிரடி படையினரால் கிணற்றில் இருந்து வெடி பொருள்களை மீட்கும் அகழ்வுப்பணி தொடர்ந்து முன் னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு வகையான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்துள் ளனர்.

# சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் இலங்கை ஜனாதிபதி பேச்சு



சிங்கப்பூருக்கான இருநாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யகோப்பை நேற்றுக் காலை சந்தித்துப் பேசியுள்ளார்.

சிங்கப்பூர் இஸ்தான மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதியால் அன்பான வரவேற்பளிக்கப்பட்டதோடு, சுமுகமான கலந்துரையாடியதன் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் இரு தரப்புப் பேச்சில் ஈடுபட்டனர்.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால இருதரப்பு தொடர்புகளைப் பலப்படுத்திக்கொண்டு, முன்னோக்கிச் செல்வது தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்தாலோசித்தமையோடு, உணவுப் பாதுகாப்பு, மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உள்ளிட்ட துறைசார் ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது, இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான பாதுகாப்பு தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோல், தெற்காசிய வலயத்தின் பொது பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியான தகவல் பரிமாற்றம் மற்றும் உரிய வகையிலான தொடர்பாடல்களை பேண வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். வலயத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ள இரு தரப்பும் அர்பணிக்க வேண்டும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

அதன்பின்னர் சிங்கப்பூர் நிலைபேறு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கிரேஸ் பூ ஹாய் இயனையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிற்பகல் சந்தித்தார்.

# ‘முள்ளில் விழுந்த சேலை’ நிலையில் ‘13’ இப்போது!

## தமிழ்க் கட்சிகளைத் தந்திரமாக கையாளக் கோருகிறார் டக்ளஸ்



கொழும்பு,ஓக. 22

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில் கூப்பாடு போடாமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் ஒன்று பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பயனாக இலங்கையின் அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தம் தற்போது முள் செடியில் மாட்டிய சேலையைப் போல் உள்ள நிலையில் அதனை கிழியாமல் எடுத்து செய்ய வேண்டியதை செய்வதே எமது இலக்காக இருக்க வேண்டும்.

இதை ஏன் நான் உதாரணமாக கூறினேன் என்றால் பதின்மூன்றுக்கு எதிரானவர்கள் தென்னிலங்கையில் இருக்கின்ற நிலையில் பதின்மூன்று தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஆரவாரப்பட்டால் தேவையற்ற பிரச்சினைகளை அது ஏற்படுத்தக் கூடும்.

இலங்கை –.இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் பிரேமதாஸவின் காலத்தில் நான் இலங்கைக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக – தேசிய நல்லிணக்கம் ஊடாக – பிரச்சினையை அணுகுதலை இன்று வரை செயல்படுத்திக் கொண்டு வருகிறேன்.

நமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில் அவர்களின் விருப்பத்தை மீறி தீர்மானங்களை மேற்கொள்வது கஷ்டமான காரியம்.

அதேபோன்றுதான் 13 வது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்களை குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயல்பட்டு வரும் நிலையில் அவர்களின் உசுப்பேத்தல்களுக்கு தமிழ் தரப்புகள் கூக்காடு போட்டால் அரசாங்கத்துக்கு இடையூறுகள் ஏற்படும்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஆரம்ப கட்ட தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்ற நிலையில் நாடாளுமன்றத்தின் ஆதரவுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆகவே பதின் மூன்று தொடர்பில் தேவையற்ற பேச்சுக்களை தவிர்த்து தந்திரமான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# எல்.பி.எல். இறுதிப் போட்டியை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி






கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் கண்டுகளித்தார்.

இறுதிப் போட்டியைப் பார்வையிட வருகை தந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

அமைச்சர்ஹரின்பெர்னாண்டோ, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதிபணிக்குழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் போட்டியைக் கண்டுகளித்தனர்.







# தமிழகத்தில் தலைதூக்கும் வெடிகுண்டு கலாசாரம்!

## - அண்ணாமலை கண்டனம்

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் தலைதூக்கியுள்ள வெடிகுண்டு கலாசாரம், தற்போது கல்லூரி மாணவர்களுக்கிடையேயும் பரவியுள்ளது என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், சென்னை வேளச்சேரி யில் தனியார் கல்லூரி மாண வர்களுக்கிடையேயான பிரச்சினையில், நாட்டு வெடிகுண்டு வீசித் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளதாக செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியடைந்தேன்.

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தலைதூக்கியுள்ள வெடி குண்டு கலாசாரம், தற்போது கல் லூரி மாணவர்களுக்கிடையேயும் பரவியிருப்பது, தமிழகம் எத்தனை மோசமான நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. கஞ்சா, வெடிகுண்டு உள்ளிட்டவை தமிழகத்தில் எளிதாகக் கிடைக்கிறது. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு இதற்கு மேலும் சீர்கெட முடியாது.



உடனடியாக இந்தச் சம்பவத்தின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை உரிய விசாரணை நடத்தி கடு மையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வெடிகுண்டு கலாச் சாரத்தை மீண்டும் தலைதூக்க விடாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் தமிழக பாஜக சார்பாக முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன் என்று அவர் பதி விட்டுள்ளார்.

# அ.தி.மு.க. மாநாட்டில் கலந்துகொண்ட 8 பேர் வீதி விபத்துகளில் உயிரிழப்பு!

## - இ.பி.எஸ். நிதியுதவி அறிவிப்பு



மதுரையில் இடம்பெற்ற அ.தி.மு.க. மாநாட்டுக்கு செல்லும்போதும், மாநாடு முடிந்து வீடு திரும்பும்போதும் இடம்பெற்ற வீதி விபத்துகளில் உயிரிழந்த 8 பேரின் குடும்பத்தினருக்கு அந்த கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரி வித்துள்ளார்.

மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 6 லடசம் ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்று அறி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள இரங்கல் செய்தியில், 'அ.தி.மு.க. எழுச்சி மாநாட்டில் தன்னெழுச்சியோடு கலந்து கொள்வதற்காக, நிர்வாகிகளும், தொண்டர்களும் வருகை தரும்போதும், மாநாடு முடிந்து வீடு திரும்பும்போதும் எதிர்பாராத விதமாக விபத்துக்களால் உயிரிழந்துவிட்டனர். இந்த செய்தி அறிந்து மனவருத்தம் அடைந்தோம்.

நிர்வாகிகளும், தொண்டர்களும், வீதிகளில் பயணம் செய்யும்போது, மிகுந்த பாதுகாப்புடனும், எச்சரிக்கை யுடனும் தங்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அவ்வப்போது நான் வலியுறுத்தி வரும் நிலையில், இதுபோன்ற விரும்பத்தகாத விபத்துகள் நடைபெற்று, கட்சியினர் உயிரிழப்பதும், காயங்கள் அடைவதும், மேலும் என்னை வேதனையில் ஆழ்த்துகிறது.

அதேபோல், வாகன விபத்துகளில் படுகாயமடைந்து, மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும், மருத்துவ சிகிச் சைக் காக கட்சியின் சார்பில் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் பூரண நலம்பெற எல்லாம் வல்ல இறை வனை வேண்டுகிறேன் என்று குறிப் பிட்டுள்ளார்.

# அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த அன்புமணி அழைப்பு

காவிரி பிரச்சினையை கர்நாடக அரசின் செயல்பாடுகளை சுட்டிக் காட்டியுள்ள பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், இது குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உடன டியாக நடத்த வேண்டும் என்று வலியு றுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தனது சமூக வலைதளப் பக்கத்தில் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள பதிவில், காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் தராமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ, அவை அனைத்தையும் கர்நாடக அரசு திட்டமிட்டு செய்து கொண்டிருக்கிறது.

காவிரியில் தமிழகத்துக்கு திறந்து விட கர்நாடக அணைகளில் தண்ணீர் இல்லை என்பதால் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்ற காவிரி ஆணையத்தின் ஆணையை ரத்து செய்ய வேண்டும்.

மேகதாது அணை கட்ட அனும திக்க வேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள கர்நாடக அரசு, இன்னொருபுறம் பல பகுதிகளில் தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பதற்கு எதிராக போராட்டங்களையும் தூண்டி விட்டு ள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவை தாக்கியது ஹிலாரி சூறாவளி!





அமெரிக்காவில் 84 ஆண்டுகளின் பின்னர் கலிபோர்னியா மாகாணத்தை தாக்கிய முதல் வெப்பமண்டல சூறாவளி, அம்மாநிலத்தில் வெள்ள பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

ஹிலாரி சூறாவளி என பெயரிடப்பட்ட குறித்த புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட வெள்ளத்தால் தெற்கு கலிபோர்னியாவில் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூறாவளி மணிக்கு 119 கிலோமீட்டர் வேகத்தில், நேற்று முன் தினம் மெக்சிகோவில் உள்ள பாஜா கலிபோர்னியா தீபகற்பத்தில் இருந்து கரையை கடந்தது.

மேலும், சூறாவளியால் மெக்சிகோவில் ஒருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 5 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், தென்மேற்கு அமெரிக்காவின் பெரும்பகுதிக்கு பேரழிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ஓஜாய் நகருக்கு அருகே 5.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இதனால் பொருள் சேதமோ, உயிர்சேதமோ ஏற்பட்டது என எந்த தகவலையும் அந்நாட்டு ஊடகங்கள் வெளியிடவில்லை.

இதனையடுத்து, கடற்கரைகளுக்குள் மக்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மெக்ஸிகோவில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிட்டத்தட்ட 19 ஆயிரம் மீட்பு வீரர்களை மெக்சிகன் அரசாங்கம் நிலைநிறுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட 1,725 பேர் மெக்சிகோ இராணுவத்தால் திறக்கப்பட்ட 35 முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். மேலும், கலிபோர்னியாவில், ஐந்து புயல் முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

## உக்ரைன் இராணுவம் ட்ரோன் தாக்குதல்: இரு விமான நிலையங்களை மூடியது ரஷ்யா



உக்ரைன் இராணுவத்தின் ட்ரோன் தாக்குதலுக்கு பயந்து மாஸ்கோ நகரில் இரண்டு விமான நிலையங்களை ரஷ்யா அவசரமாக மூடியுள்ளது.

இராணுவ விமானத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த சூப்பர்சோனிக் அணு குண்டுவீச்சு விமானமொன்று ட்ரோன் தாக்குதலில் சேதமடைந்த நிலையில் ரஷ்யா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தலைநகர் மாஸ்கோவில் செயல்பட்டு வரும் டொமாடோவோ மற்றும் வேனுகோவோ விமான நிலையங்களை தற்காலிகமாக மூடப்படுவதுடன் அனைத்து சேவைகளும் ரத்து செய்யப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த இரு விமான நிலையங்களில் அனைத்து சேவைகளும் முடக்கப்பட்ட நிலையில், 50 மைல்கள் தொலைவில் உள்ள சேறெமீடியேவோ விமான நிலையத்திற்கு விமானங்கள் திருப்பிவிடப்பட்டுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் விலையுயர்ந்த போர் விமானம் ஒன்று ட்ரோன் தாக்குதலில் சேதமடைந்துள்ளதை அடுத்தே ரஷ்ய அதிகாரிகள் இந்த முடிவினை அறிவித்துள்ளனர்.

உக்ரைனில் இருந்து சுமார் 700 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள இராணுவ விமான நிலையத்திலேயே அந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தாக்குதலில் சேதமடைந்த போர் விமானத்தை உடனடியாக இன்னொரு பகுதிக்கு மாற்றியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதலை அடுத்து, உக்ரைன் பயங்கரவாத தாக்குதலை முன்னெடுக்க துவங்கியுள்ளது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

## புலம்பெயர்வோர் மீது துப்பாக்கி சூடு!

ஏமன் வழியாக சவுதி அரேபியாவிற்கு சட்டவிரோதமாக புலம்பெயர்வோர் மீது அந்நாட்டு இராணுவம் வெடிகுண்டு வீசி தாக்கி வருகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.


எத்தியோப்பியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள், வேலை தேடி சவுதி அரேபியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்து வருகின்றனர் என கூறப்படுகிறது.

ஏமன் எல்லை அருகே அவர்களை சவுதி அரேபிய இராணுவத்தினர் கண்மூடித்தனமானச் சுட்டு கொல்கின்றனர் என கடந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் மட்டும் 430 பேர் இறக்கமின்றி கொல்லப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க சவுதி அரேபியா மறுத்துவிட்டது என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

# சிகிரியா பிரதேசத்தை சுற்றுலா மையமாக்க 15 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு

## ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெளிநாட்டு , உள்நாட்டு சுற்றுலா துறை மூலம் எமது நாட்டுக்கு பெரும் வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் சிகிரியாவை சூழவுள்ள பிராந்தியத தின் சுற்றுலா வசதி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு, முன்னேற்று வதற்கும் நகர அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிகிரியாவை அண்மித்த பகுதி களை அபிவிருத்தி செய்து சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்து,வருமான உருவாக்கம், முதலீட்டு ஊக்குவிப்பு நோக்கத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் 15 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியுடன் இது முன்னெ டுத்துச் செல்லப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் சீகிரிய புதிய நகரம், பொதுமக்கள் வாகன தரிப்பிடம், வியாபார தலங்கள், நூதனசாலை, நுழைவாயில் நிர்மாணம், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கான வாக னத் தரிப்பிடம் என்பன அமைக்கப்பட வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாதை செப்பனிடப்படவில்லை: கூட்டங்களால் என்ன பயன்?

## பொதுமக்கள் கேள்வி

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அரைகுறையாக கிடக்கும் பாதை செப்ப னிடப்பட வேண்டும் என்று இரண்டு தடவைகள் கூறப்பட்ட போதிலும் இன்னும் அது செப்பனிடப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரி விக்கின்றனர்.

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் அம்பாறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் முஷாரப் தலைமை யில் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் பிரசன்னத்தில் பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் ஏற் பாட்டில் இடம்பெற்றது. இதன்போது, விபுலானந்த வீதி கார்பெட் இடப்பட் டும் இருமருங்கிலும் முடிவுறுத்தப் படாமல் இருப்பது குறித்து முறைப் பாடு இரு தடவைகளில் தெரிவிக்கப் பட்டது.

தொடர்ச்சியாக இரண்டு கூட்டங் களில் இந்த முறைப்பாடுகள் தெரி விக்கப்பட்டன.

அதில் கலந்து கொண்ட வீதி அபி விருத்தி அதிகார சபையின் உத்தியோ கத்தர் இதனைச் சீர்செய்து தருவார் என்று பகிரங்கமாக உறுதி அளித் திருந்தார்.

ஆனால் ஐந்து மாதங்கள் கடந் தும் இன்னும் அந்த காப்பட் வீதி இரு மருங்கிலும் செப்பனிடப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

இந்த விபுலானந்த வீதி ஏனவே கொங்கிறீட் வீதியாக இருந்தது. ஆனால், மக்களின் எந்தவித கருத்தும் எடுக்கப்படாமல் அதற்கு மேல் இரண்டு அடி உயரத்தில் காப்பெட் இடப்பட்டது .இதனால் மக்களின் குடிமனைகள் தாழ்ந்து போனது. அத்துடன் வாக னங்களை வீதிகளில் ஏற்றுவதற்கு பயணிகள் மிகவும் சிரமப்படுகின் றார்கள். அதனால் வாகனங்கள் பழுதடைந்து விடுகின்றன. எனவே இதனை சீர் செய்து தருமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.



# கஜேந்திரகுமார் எம்.பியின் கொழும்பு இல்லத்தின் முன் போராட்டத்துக்கு முஸ்தீபு!

## பௌத்த - சிங்களவாதத் தரப்பு அழைப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும்.

சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆரம்பமாக கொழும்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டின் முன்பாக இவ்வாரம் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இந்த போராட்டத்தில் சிங்கள பௌத்தர்கள் அனைவரும், இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்து கொள்ள வேண்டும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அழைப்பு விடுத்தார்.

குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனவாதக் கொள்கையுடைய பொன்னம்பலம் பரம்பரையின் மூன்றாவது தலைமுறையான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருந்தூர் மலைக்கு சென்று அரங்கேற்றிய நாடகத்தை நாங்கள் அனைவரும் பார்த்தோம்.

தமிழ் அடிப்படைவாதிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிமன்ற அனுமதியைப் பெற்று அங்கு வருகை தந்தமையால் நாங்கள் அவர்களைத் தடுக்கவில்லை.

நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதப்படும் என்பதால் நாங்கள் அமைதியாக இருந்தோம்.

தொடர்ந்து அமைதியாக இருப்பது அவர்கள் வெற்றிப் பெற்றார்கள் என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கும். அவர்களை மகிழ்விக்கும்.

குருந்தூர்மலை குறித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்மானம் எந்தளவுக்கு நியாயமானது என்பது தர்க்கத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை குருந்தூர் விகாரையின் விகாராதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

குருந்தூர் விகாரை 2200 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

குருந்தூர் மலையை சூழ்ந்த பகுதிகளில்புராதனதொல்பொருள்கள்பௌத்த உரிமையை பறைசாற்றுகின்றன.

குருந்தூர் மலை குறித்து மகாவசம்சம் உள்ளிட்ட பௌத்த நூல்களில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குருந்தூர் விகாரரை பௌத்தர்களுக்கு சொந்தமானதா என்பது சந்தேகத்துக்குரியதொரு விடயமல்ல.



குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது என்பதற்கும் அங்கு இந்து கோயில் இருந்ததற்கும் எவ்வித தொல்பொருள் சான்றுகளும் கிடையாது.

விகாரையில் உள்ள தூண்களில் ஒரு தூண் வட்ட வடிவில் உள்ளது. இந்த தூண் சிவலிங்கம் என்று குறிப்பிட்டு முறையற்ற தர்க்கத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு குருந்தூர் மலை இந்துக்களுடையது என்ற போலியான தர்க்கத்தை முன்னிலைப்படுத்தி பௌத்தர்களுக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் இடமளித்துள்ளது.ஆனால் பௌத்த மரபுரிகளை பேணி பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையுடைய பௌத்தர்களுக்கு இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

தமிழ் அடிப்படைவாதிகளின் நாடகத்துக்கு இடமளித்தால் பௌத்தர்களின் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு அரசாங்கம் கோழைத்தனமாக இருக்கலாம். ஆனால் பௌத்தர்கள் கோழைத்தனமாக இருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருக்கும் காலத்தில் தான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அழிக்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் வேண்டியதை செய்யலாம் என்ற நம்பிக்கை உள்ளதால் தமிழ் அடிப்படைவாதிகள் பௌத்த மரபுரிமைகளை அழிக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொள்ளுப்பிட்டியில் வாழ்கிறார். அவரின் தந்தையும் கொழும்பில் வாழ்ந்தார் . அவரது பாட்டனாரும் கொழும்பில் வாழ்ந்தார்.

இவர் கொழும்பில் வாழ்ந்துக் கொண்டு விடுமுறை நேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்று இனவாதத்தைப் பரப்பி அதனூடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி சுகபோகமாக வாழ்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வாழ்வதற்கு எவரும் இடையூறு விளைவிக்கவில்லை.

அவரது பரம்பரைக்கும் எவரும் இடையூறு விளைவிக்கவில்லை.கொழும்பில் உள்ள இந்து கோயில்களுக்க நாங்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகிறோம். தேசிய நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை நாங்கள் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் சாதாரண தமிழர்கள் அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகளின் கொள்கைகளில் இருந்து வேறுப்பட்டுள்ளார்கள்.

அடிப்படைவாத – பிரிவினைவாத – கொள்கையுடைய தமிழ் அரசியல்வாதிகளின் பிடிகளில் இருந்து தமிழ் மக்களை விடுவித்தால் மாத்திரமே இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த முடியும்.

கொழும்பில் இருந்துக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களை இனவாத செயற்பாடுகளில் ஈடுபட தூண்டிவிடும் வரிசையில் பொன்னம்பலம், சுமந்திரன், சம்பந்தன் உள்ளிட்ட அனைவரும் உள்ளடங்குகிறார்கள்.

தெற்கில் இவர்கள் வாழ்வதற்கு உள்ள சுதந்திரத்தை வடக்கில் சிங்களவர்களிடமிருந்து பறிப்பதற்கும் தடையேற்படுத்துவதற்கும் இவர்களுக்கு தார்மீக உரிமையில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும்.

அந்தக் கோரிக்கையை முன்வைக்க எமக்கு உரிமை உண்டு.ஆகவே சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க இந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வசிக்கும் வீட்டின் முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இந்தப் போராட்டத்தில் சிங்கள பௌத்தர்கள் அனைவரும் கலந்துக் கொள்ள வேண்டும் இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# வெருகலம்பதி சித்திர வேலாயுதனின் கொடியேற்றம்





( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், சின்னக்கதிர்காமம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த சனிக்கிழமை (19) இடம்பெற்றது.

தொடர்ந்து 18 தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று 6.9.2023 புதன் கிழமை அதிகாலை 4.15 மணிக்கு தீ மிதிப்பு வைபவமும், காலை 7.10 மணிக்கு புனித கங்கையிலே தீர்தோற்சவமும் நடைபெறும்.

ஆலயத்தில் உற்சவ நிகழ்வுகள் யாவும் வேதாகம மாமணி பிரம்ம ஸ்ரீ.சோ. ரவிச்சந்திரக் குருக்கள் அருள் ஆசியுடன் மகோற்சவ பிரதமகுரு கிரிஹா திலகம் பிரம்மஸ்ரீ.அ.செல்வராஜக் குருக்கள், ஆலய பிரதம சிவ ஸ்ரீ ச.சிவகுமாரக் குருக்கள் ஆகியோரின் அருளாசியுடன் நடைபெறும்.

# ஆண்டு நிறைவை முன்னிட்டு 'ரீ சேர்ட்' அறிமுகம்




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக் காடு அல்- ஹுசைன் வித்தியாலய 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், பாடசாலையின் முதல் ஆசிரியரும், இரண்டாவது அதிபருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம். ஏ. நழீரின் ஓய்வை முன்னிட்டும் பாடசாலை பழைய மாணவர்கள் செயற்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "முத்தாய்ப்பான முத்து" விழாவின் முதல் கட்ட 'ரீ சேர்ட்' அறிமுக விழா நேற்றுமுன்தினம் (20) பாடசாலையில் நடைபெற்றது.




பாடசாலை பழைய மாணவர்கள் செயற்குழு செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் ஹுதா உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய அபிவிருத்தி பிரிவுக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பீ. ஜிஹானா ஆலிப், கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன நிகழ்ச்சி திட்ட ஆலோசகர் எம்.ஐ.எம். வலீத், சாய்ந்தமருது அனைத்து பொது நிறுவனங்கள் அமைப்பின் தலைவரும், அமானா நற்பணி மன்ற தலைவருமான ஏ.எல். பரீட், பாடசாலையின் பிரதியதிபர் ஏ.எல். எம். நளீம், ஆசிரியர்கள், அல்- ஹுசைன் வித்தியாலய பழைய மாணவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 21 .08.2023


மேஷம்

இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.


ரிஷபம்

இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்,

இன்று தோல் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் வைப்பது நல்லது. மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.


மிதுனம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்களுக்குக் கூட எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப்படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.

இன்று சளி / இருமல் பாதிப்பு காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.


கடகம்

இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று அதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.


சிம்மம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கன்னி

உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவு முறை காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.


துலாம்

இன்று கடினமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும். உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.


விருச்சிகம்

இன்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப்பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

ரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 21 .08.2023




இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச்சூழல்சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
CENTRALPARK JA-ELA
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park